மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: **திரு.T.கோகுலகிருஷ்ணன் B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **டிசம்பர்** மாதம் **01**ம் நாள்
**சுபகிருது** ஆண்டு **கார்த்திகை** மாதம் **15**ம் நாள் **வியாழ**க்கிழமை
CNR No. TNMD19000152 -2019
**I.A.No. 670/2022**
**in**
**IA.No. 1238/2021**
**in**
**O.S No. 96/2019**

தனலெட்சுமி ... மனுதாரர்கள்/1,2 மற்றும் 4ம் பிரதிவாதிகள்

//எதிர்//

1. மாரியம்மாள் ... எதிர்மனுதாரர்/வாதி

2. சார்பதிவாளர் அவர்கள், சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகம், வாடிப்பட்டி தாலுகா, வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம். ... 3ம் பிரதிவாதி/இடைநிலை மனுவில் 2ம் எதிர்மனுதாரர்

இம்மனு **15.10.2022ம்** தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/1,2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.**அரிச்சந்திரன்** அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/1ம்வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.தியாகராஜன்** மற்றும் திரு.M.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி/2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், கடந்த **24.11.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**<u>உத்தரவு</u>**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 4ம் பிரதிவாதி ஆவார் என்றும், 1,2 பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல்

வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கினை ரத்து செய்யக்கோரி இ.மஎண். 1238/2021 என நிலுவையில் உள்ள நிலையில், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள அசல் ஆவணங்களை மனு தாக்கல் செய்யப்படும்போதுதாக்கல் செய்யப்படவில்லை என்றும், தற்சமயம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கலான W.P.(MD)No.14843/2020 என்ற ரிட் மனுவில் உத்தரவு நகல் மற்றும் மதுரை கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் முன்னிலையில் மனுதாரர்/4ம் பிரதிவாதி தாக்கல் செய்த நி.மு.எண்.10134/2015 ன் உத்தரவு நகல், 4ம் பிரதிவாதியின் கிரையப்பத்திரம், 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள சிட்டா ஆகிய ஆவணங்களை தற்சமயம் தாக்கல் செய்யவேண்டிஇம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பினை நிரூபணம் செய்யக்கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் காலதாமதமாக கிடைத்ததால் தற்போது தாக்கல் செய்யப்படுகிறது என்றும். இம்மனு அனுமதிக்காவிட்டால் மனுதாரர்கள்/1,2,4 பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிர் மனு உரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார் என்றும்,அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தானது எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும். தாவா சொத்தினை எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் பலதலைமுறைகளாக அனுபவம் செய்து வரும் நிலையில், மேற்படி, 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளான தனலெட்சுமி, விஜயலெட்சுமி ஆகிய இருவரும் தாவா சொத்தில் எதிர்மனுதாரர்/வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்ததால், கடந்த 26.09.2019ம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, சாட்சிய விசாரணை நிலையில், தாவா சொத்தான சர்வே 482/2, 482/1, 486/3யு ஆகிய சொத்துக்களை மனுவினை தாக்கல் செய்தள்ள அரிச்சந்திரன் என்பவரின் மகள் தீபா கடந்த 09.09.2019ம் தேதியில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் அசல் வழக்கானது நிலுவையில் உள்ள நிலையில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி 1,2 பிரதிவாதிகளும் மேற்படி தீபா என்பவரும் கூட்டாக சேர்த்து தாவா சொத்தை கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் அசல் வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து கிரையம் பெற்ற தீபா என்பவரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட நிலையில், மேற்படி தீபா என்பவர் மூலம் அசல் வழக்கினை ரத்து செய்யக்கோரும் மனு தாக்கல் செய்து அதில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

உண்மையில், அசல் வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்தும், 4ம் மனுதாரர்/4ம் பிரதிவாதியின் தந்தை வழக்கறிஞர் என்பதை பயன்படுத்தி தாவா சொத்தினை கிரையம் பெற்றதோடு கிரையம் பெற்ற விபரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் எதிர்மனுதாரர்/வாதியால் 4ம் பிரதிவாதியாக சேர்க்க மனு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு, தற்சமயம் அசல் வழக்கு கோப்பிற்கு எடுத்தது குறித்து மனு தாக்கல் செய்ய எவ்வித சட்ட முகாந்திரமும் இல்லை என்றும். 4ம் மனுதாரர்/4ம் பிரதிவாதி தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் 3வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்புமிகு உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் உத்தரவான W.P.(M.P)No. 14843/2020 உத்தரவானது எதிர்மனுதாரர்/வாதியான மாரியம்மாள் தாக்கல் செய்த மனுவின் பேரிலான உத்தரவு நகலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால், மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீட்டு மனு எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரத்தையும் நீதமன்றத்தில் இடையீட்டு மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி, உத்தரவிலும் தாவா சர்ே எண்ணான 482/2 சர்வே எண்குறிப்பிடப்படவில்லை என்றும், ஆனால், மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில்இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 5 மற்ம் 6வது ஆவணமான 09.09.2019ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மற்றும் பட்டா எண். 1866-ல் மேற்படி சர்வே எண்482/2 குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

மேற்படி வருவாய் கோட்டாட்சியர் உத்தரவிலும் 15.02.2019 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும். மேற்படி திருத்தமானது யாரால் செய்யப்பட்டது என்ற விபரம் இல்லாமல் 4வது ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும். 5வது ஆவணமான கிரைய பத்திரத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து உள்ள அசல் பத்திரமானது எதிர்மனுதாரர்/வாதியிடம் கைவசம் உள்ள உண்மையை மறைத்து மேற்படி பத்திரமானது தொலைந்து விட்டதாக மனுதாரர்/4ம் பிரதிவாதியின் சகோதரர் காவல்துறையில் பணியாற்றி வருவதை பயன்படுத்தி, உண்மை மறைத்து அசல் பத்திரம் தொலைந்து விட்டதாக காட்டி மேற்படி கிரையப்பத்திரமானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும்,

மேற்படி கிரையப்பத்திரத்தில் உள்ள அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்துரையில் தேதிகள் முன்னுக்கு முன் முரணாக காட்டப்பட்டுள்ளது என்றும், உண்மைசங்கதிகள் எதுவும் தாக்கல் செய்யாமல் தாவா சொத்துக்களை கைபற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான ஆவணங்களை உறபத்தி செய்து பதிவு செய்யப்பட்ட 09.09.2019ம்தேதியிட்ட கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாத ஒன்றாகும் என்றும், அதனடிப்படையில் பெறப்பட்ட 6வது ஆவணமான பட்டா எண். 1866 பட்டாவினை குறியீடு செய்ய எவ்வித சட்ட முகாந்திரமும் இல்லை என்றும், சட்ட நடைமுறைகள் நன்கு தெரிந்தும் பொய்யான ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனு அபிடவிட் மற்றும் எதிர்மனு உரை இந்த நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு**</u>

**4)** இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகளும் மற்றும் வழக்கு கோப்புகளும் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5) இம்மனுவின் அசல் மனுவான இ.ம.எண். 1238/2021-ல் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்திட நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி கட்டளை 7 விதி 14 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவின் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் மனுவான இ.ம.எண். 1238/2021 மனு என்பது, மனுதாரர்கள்/1,2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 7 விதி 11 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

8) மனுதாரர்கள்/1,24 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மமனுவில் குறியீடு செய்ய வேண்டி கோரப்பட்ட ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

9) எதிர்உரையில், சொல்லப்பட்டுள்ள ஆட்சேபணைகளை சமூக நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள நிலையில், மனு சொத்தை பொறுத்து மனுதாரர்/4ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி மனு சொத்தை பொறுத்து இந்த மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தரப்பினராக

சேர்க்கப்பட்ட நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆவணங்கள் குறித்து ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, இம்மனு தாக்கல் செய்திட மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்றும், எதிர்மனுதாரர்/வாதியால் எதிர்மனு உரையில் தாக்கல் செய்யப்பட்டு, வாதுரைக்கப்பட்டுள்ளது.

9) மேற்படி குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களால், அசல் மனுவில் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், மேலும், குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் உண்மைத்தன்மையைக் குறித்து இந்த எதிர்மனுதாரர்/வாதியால் அசல்மனுவான இ.ம.எண். 1238/2021 மனுவில் வாதுரையின் மூலம் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டும் மேலும், அசல் மனுவான இ.ம.எண். 1238/2021 மனுவில் உத்தரவின் மூலம் உறுதி செய்து கொள்ள சமூக நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் நலன் கருதியும், இம.எண். 1238/2021 மனுவின் தன்மை கருதியும் நீதியின் நீதியின் நலனுக்குட்பட்டு இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**1) மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை

**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்**கள்: இல்லை.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//